## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### சனிக்கிழமை, 1977 ஆகஸ்ட் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. இரங்கல் தீர்மானம்.

#### முன்னாள் அமைச்சர் திரு. வி. ராமையா அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மாநிலத்தில் அமைச்சராக இருந்த திரு. வி. ராமையா அவர்கள் நேற்று 12—8—1977 ஆம் நாளன்று மறைந்து விட்டதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: ''1957ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டுவரை திருமயம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்த திரு. வி. ராமையா அவர்கள் 12—8—1977ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.''

மறைந்த திரு. ராமையா அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை மின்சாரத்துறை அமைச்சராகவும், 1962ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரை பொதுப்பணி-உணவுத் துறைக்கு அமைச்சராகவும் பதவி வகித்து நமது மாநிலத்தில் ஒரு நல்ல அமைச்சராக விளங்கினார் என்பது இந்த அவைக்கும் தெரியும், தமிழகத்திற்கும் தெரியும். அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே படித்த நேரத்திலேயும், லயோலா கல்லூரியிலே பயின்றபோதும் மாணவர் இயக்கத்திலே கலந்துகொண்ட காரணத்தினாலே அவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசியல் நிர்ணய சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப்பிறகு அவரது கட்சியில் பல்வேறுபட்ட பணிகளை, பொறுப்புகளை மேற்கொண்டு ஒரு நல்ல தேசியவாதியாக விளங்கினார் என்பதும் தமிழகத்திற்குத் தெரியும்.

அவர் பழகுவதற்கு இனியவராகவும், ஒரு பண்புள்ள அரசியல்வாதியாகவும், நல்லவராகவும், அனைவரோடும் பழகுபவராகவும் இருந்திருக்கிறார் என்பதை அதிகமாக நேரில் எனக்கு அவரிடம் பழக்கம் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட சில நாட்களில் அவர் தங்குகின்ற அறைக்கு அடுத்த அறையிலே நானும்

தங்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அவரோடு பழக நேரிட்டது. அப்படிப்பட்டவருடைய இழப்பை ஒரு பேரிழப் பாக இந்த அவை கருதுகிறது.

அதுமட்டுமல்ல, இந்த அவையில் வேதனைக்குரிய முறையில் இப்படிப்பட்ட அனுதாபத் தீர்மானங்களை அடிக்கடி கொண்டு வருகின்ற ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டமைக்காக நான் வருந்துகிறேன் என்பதோடு, அந்த நிலை இனிமேல் வராமல் இருக்கட்டும் என்ற எனது ஆசையைத் தெரிவித்து அவரது மறைவால் வாடுகின்ற குடும்பத்தினருக்கு இந்த அவையின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நான் அமர்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மறைந்த முன்னாள் அமைச்சர் இராமையா அவர்கள் இந்த மாமன்றத்தில் பத்தாண்டு காலம் ஆட்சிப்பொறுப்பை காங்கிரஸ் ஏற்றிருந்தபொழுது மிகத் திறம்பட தன்னுடைய அமைச்சர் பணியை ஆற்றிய ஒரு பெருந்தகை ஆவார்கள். 1957முதல் 1967 வரையில் அவர்கள் இங்கே அமைச்சராகப் பணியாற்றியபொழுது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருந்திருக்கிறேன். அவர்கள் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே மாணவர் பருவத்திலேயே பங்குபெற்றவர் என்பதை நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். பங்கு பெற்றது மட்டுமல்லாமல் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளான நேரத்திலேயும் மனந்தளராமல் தியாகச் சுடர்களில் ஒருவராக அவர்கள் விளங்கினார்கள் என்பதையும் தமிழகம் நன்கறியும்.

1967க்குப் பிறகு அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட்டார். தமிழகத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பையும் ஏற்றிருந்தார். அதன் பின்னர் குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் மாநில திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் பொறுப்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. அந்தப் பொறுப்பினையும் அவர் ஒழுங்குற நிறைவேற்றினார். அமைச்சராக இருந்த அந்தக் காலத்திலேயே எதிர் தரப்பிலே இருந்து எவ்வளவு ஆத்திரம் ஊட்டத்தக்க சொற்கள் அவரை நோக்கிப் பாய்ந்தாலும் மிகப் பொறுமையோடு பதில் கூறக்கூடிய ஒரு மனப்பக்குவத்தை அவர் பெற்றிருந்தார் என்பது அவரோடு பழகியவருக்கும் இந்த அவையில் அவர் இருந்த நேரத்தில் இருந்தவருக்கும் மிக நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அதிலும் குறிப்பாக மானியக் கோரிக்கைகளில் பதில் சொல்லுகிற நேரத்தில் அவரும் திரு. கக்கன் அவர்களும் எல்லோருடைய பெயர்களையும் குறித்து வைத்துக்கொண்டு அவரவர்களுக்கு திருப்தி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எல்லோருடைய பெயர்களையும் ஒரு முறை சொல்லி, அவரவர்கள் எழுப்பிய பிரச்சனைகளுக்குப் பதில் அளித்தால் அந்தக் கேள்விகளை எழுப்பியவருக்கு திருப்தி அளிக்கிறதோ இல்லையோ அந்தப் பதில் அளிப்பதால் தங்களுக்கு ஒரு மன ஆறுதல் ஏற்படுகிறது என்ற

1977 ஆகஸ்ட் 13] [திரு. மு. கருணாநிதி]

அளவில் இங்கே நடந்து கொண்ட அமைச்சர்களில் ஒருவராக மறைந்த இராமையா அவர்கள் திகழ்ந்தார்கள். அப்படிப்பட்ட வரை இன்று நாம் இழந்திருக்கிறோம்.

நேற்று காலையிலே அவர் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. மாலையிலே சென்று காணலாம் என்று எண்ணி இருந்தபொழுது அவர் மறைந்து விட்டார் என்ற நெஞ்சைக் குலுக்கும் செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இங்கே ஒன்றைச் சொல்லாமலிருக்க முடியாது. அவர் மறைந்த செய்தி அவருடைய கட்சியின் சார்பாகவாவது எங்களுக்கெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்குமானால் அனைவரும் அங்கே சென்று அவருடைய புகழுடலுக்கு மலர் வளையம் வைக்கின்ற வாய்ப்பினை பெற்றிருக்கலாம். அந்த வாய்ப்பினை அளிக்காதது, இங்கே அவரோடு பழகினோம் என்ற அளவில் மாத்திரமல்ல, அவருடைய உற்ற நண்பர்களில் ஒருவர் என்ற முறையிலே—அவருடைய பிரிவானது—உள்ளபடியே மிகவும் வருந்தத்தக்கது. எனினும் மறைந்தவர் என்றென்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கக்கூடியவர் என்ற முறையிலே அவருடைய குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமர்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மறைந்த மதிப்பிற்குரிய இராமையா அவர்கள் நீண்ட நாட்களாக பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருந்தவர்கள். தன்னுடைய கல்லூரிப் பருவத்திலேயே சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள். அதன் பிறகு தொடர்ந்து அவர்கள் பல்வேறு பொறுப்புகளில் இருந்து எல்லோருக்கும் நிறைவு ஏற்படக்கூடிய வகையிலே செயலாற்றி வந்தார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் 10 ஆண்டுகள் அமைச்சரவையிலே இருந்து பல்வேறு பெரும் பொறுப்புகளை எல்லாம் நிர்வகித்துத் திறம்பட நடத்தியவர்கள். அவர்கள் இந்த அவையிலே அமைச்சராக இருந்தபொழுது நானும் எதிர் தரப்பிலே உறுப்பினனாக இருந்தவன். அவர்கள் எல்லோரிடத்திலும் இனிமையாகப் பழகக் கூடிய பண்புடையவர்கள். அதிகமாக கோபப்படாமல் பிரச்சனைகளை அணுகக்கூடிய பண்பு அவரிடத்திலே இருந்தது. அவர் 10 ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்தாலும்கூட அமைச்சராக இருந்த காலத்திலே தனக்கென, தன்னுடைய உறவினர்களுக்கென எதையும் அவர் செய்து மேம்பாடடையச் செய்தது கிடையாது என்பது பாராட்டுக்குரிய ஒன்று. இன்றைக்கு அவர் மறைந்திருக்கிறார் என்றால், அவர் பின்னாலே சொத்துக்களையும் சுகங்களையும் விட்டுச் செல்லவில்லை. மிகச் சாதாரணமான நிலைமையிலேதான் மறைந்திருக்கிறார்கள். அமைச்சர் பொறுப்பு போனபிறகு காங்கிரஸ் கட்சியிலே தலைவராக இருந்து காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்குத் தீவிரமாக பணியாற்றினார்கள்.